# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1821 - 2013 ජූලි මස 26 වැනි සිකුරාදා - 2013.07.26**

*1821 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1002 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1003 |


**கவனிக்க.-** (i) *மர்கஸ் ஸக்காபதுல் இஸ்லாமிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, யூன் மாதம் 21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *இர/குருவிட்ட மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, யூன் மாதம் 21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

**கவனிக்க.-** (i) *இவ்வர்த்தமானியின் பகுதி* V *இல் 2010 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (ஒற்றோபர்-திசெம்பர்) புத்தகப் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.*

(ii) *இவ்வர்த்தமானியின் பகுதி* VI *இல் 31.12.2011 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான ஹோமியோபதி மருத்துவ அலுவலர் பெயர்ப்பட்டியலொன்று மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.*

(iii) *இவ்வர்த்தமானியின் பகுதி* VI *இல் 31.12.2012 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2013, ஓகத்து மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஓகத்து மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - மாத்தளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, ஆவணி மாதம் 26 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, ஆடி 10.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தளை | மாத்தளை | மாத்தளை நகரப் பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், மாத்தளை |

7-827

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - மொனராகலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, ஆவணி மாதம் 26 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, ஆடி 10.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மொனராகலை | வெல்லவாயா | வெல்லவாயா பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் வெல்லவாயா பிரிவில் விவாகப் (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், மொனராகலை |

7-828

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**சுகாதார அமைச்சு**

தாதி சேவைக்குரிய மறுபயிற்சி மற்றும் இணைப்புப் பாடநெறிக்காக விஞ்ஞானமானி தாதி பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் - 2013

சுகாதார அமைச்சின் தாதி சேவையில் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிக்காக தேசிய பல்கலைக்கழகங்களில் தாதி பட்டத்தினைப் பெற்ற பட்டதாரிகளை இணைத்துக்கொள்ள தகுதியுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆண் விண்ணப்பதாரிகளின் தாதி சேவை யாப்பு விதிகளுக்கமைவாக தாபனங்களில் உள்ள வெற்றிடங்களை அடிப்படையாகக் கொண்டு இணைத்துக்கொள்ளப்படுவர்.

1. விண்ணப்பதாரிகள் எழுத்துமூலப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். எழுத்துமூலப் போட்டிப் பரீட்சையில் பெற்ற புள்ளிக்கு அமைய மற்றும் நிலவுகின்ற வெற்றிடத்திற்கு அமைய இணைத்துக்கொள்ளும் தொகை தீர்மானிக்கப்படும். அநுராதபுர பொது வைத்தியசாலையில் ஒப்பந்த அடிப்படையில் பேராசிரியர் பிரிவில் சேவையில் ஈடுபட்டுள்ள தாதி பட்டதாரிகளிடையே விண்ணப்ப முடிவுத் திகதி வரை தொடராக சேவையில் ஈடுபட்டுள்ள தாதி உத்தியோகத்தர்கள் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியதில்லை. இவர்கள் முன்னுரிமை அடிப்படையில் இவ்வர்த்தமானி அறிவித்தலுக்கமைய இணைத்துக்கொள்ளப்படுவர்.

2. **பதவிக்கான கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்**.- விஞ்ஞானமானி தாதி (Bsc. Nursing) பட்டத்தினைப் பூர்த்திசெய்திருக்க வேண்டும்.

3. **ஏனைய தகைமைகள்**.- (1) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(2) 2013.08.26 ஆந் திகதிக்கு வயது 18 இற்கு குறையாத 28 இற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும் ;

(3) குறித்த பட்டப்படிப்பு விண்ணப்பப்படிவம் முடிவுத் திதிக்கு முன்னைய திகதியாக இருக்க வேண்டும் ;

(4) உடல், உள ரீதியில் ஆரோக்கியம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். இலங்கையின் எந்தவொரு பாகத்திலும் சேவையாற்ற விருப்பம் உடையவராக இருக்க வேண்டும்.

(5) தான் விண்ணப்பிக்கும் மாவட்டத்தினுள் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு தொடர்ச்சியாக 3 வருடங்கள் வதிவிடத்தை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் ;

(6) உயரம் 4 அடி 10 அங்குலத்திற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

4. **எழுத்துமூலப் போட்டிப் பரீட்சையின் பாடத்திட்டம்**.- விண்ணப்பதாரிகள் சுகாதார அமைச்சின் மூலம் நடாத்தப்படுகின்ற பொது உளச்சார்பு மற்றும் பொது அறிவு வினாக்கள் அடங்கிய 1 மணித்தியால வினாப்பத்திரத்திற்கு விடை அளிக்க வேண்டும்.

5. **விண்ணப்பிக்கும் முறை**.- (1) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைய விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டும். இதற்காக ஏ4 அளவு கொண்ட தாள் பாவிக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் 1 தொடக்கம் 9 வரை முதல் பக்கத்திலும் 10 தொடக்கம் 13 வரை இரண்டாம் பக்கத்திலும் வருமாறு தயாரிக்கப்பட வேண்டும்.

(2) ஒவ்வொரு விண்ணப்பத்திலும் ரூபா 300 பெறுமதி கொண்ட முத்திரையை கழற்ற முடியாத வகையில் ஒட்டி அதன் மேல் கையொப்பமிட்டு முத்திரையை இரத்துச்செய்தல் வேண்டும்.

(3) இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்/கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்/அரச கணக்காளர்/அரச பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சட்டத்தரணி அல்லது வருடாந்த சம்பளமாக 2,40,360 ரூபாவிற்கு குறையாமல் சம்பளம் பெறுகின்ற நிரந்தர ஓய்வூதிய சம்பளத்திற்குரிய பதவியைக் கொண்ட அரச உத்தியோகத்தரால் இவ்விண்ணப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(4) சரியான முறையில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் தபால் உறையில் இட்டு தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் "தாதி சேவைக்குரிய மறுபயிற்சி மற்றும் இணைப்புப் பாடநெறிக்காக விஞ்ஞானமானி தாதி பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் - 2013" குறிப்பிட்ட கல்வியாண்டையும் பட்டத்தையும் குறிப்பிட்டு "பணிப்பாளர் (நிருவாகம்), இல. 01, சுகாதார அமைச்சு, 'சுவசிரிபாய', இல. 385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு 2013.08.26 ஆந் திகதிக்கு முன் பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(5) இதுவரையில் ஒப்பந்த அடிப்படையில் சுகாதார அமைச்சின் நிர்வாகத்திற்குட்பட்ட அநுராதபுர பொது வைத்தியசாலையில் பேராசிரியர் பிரிவில் சேவையில் ஈடுபட்டுள்ள தாதி பட்டதாரிகள் நிரந்தர நியமனத்தை பெற்றுக்கொள்ள விரும்பின், இவ்வர்த்தமானி அறிவித்தலின் நிபந்தனைகளுக்கு அமைய விண்ணப்பிக்க வேண்டும். இவர்கள் விண்ணப்பப்படிவத்துடன் விண்ணப்ப முடிவுத் திகதி வரை குறித்த வைத்தியசாலையில் சேவையில் ஈடுபட்டுள்ளதை நிறுவனத் தலைவரிடம் சேவை சான்றிதழ் பெற்று, அதை விண்ணப்பப் படிவத்துடன் முன்வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

6. அரச அல்லது பாதீட்டு (துணை) அரச நிறுவனங்களில் கடமையாற்றுபவர்கள் அவர்களது திணைக்களத் தலைவர்கள் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். அதேபோன்று இது வெளிவாரியான ஆட்சேர்ப்பாவதுடன் குறித்த பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யாத அல்லது முடியாதவிடத்து தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் இணைய முடியாதென்பதை கவனத்தில் கொள்ளவும்.

7. விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக அறிவிக்கப்பட மாட்டாது.

8. உரிய தினத்திற்கு பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. இவ்வறிவித்தலுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட முன்னுரிமைப் பட்டியல் முறையின் செயற்பாட்டைக் கொண்டு தெரிவுசெய்யப்படுபவர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு இணைத்துக்கொள்ளப்படுவர். விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையின்போது பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதி சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) பட்டச் சான்றிதழின் உண்மைப் பிரதி (இவ்விண்ணப்பத்துடன் பட்டச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை இணைக்கவும்.) ;
(இ) க. பொ. த. (சா. த.), க. பொ. த. (உ. த.) பரீட்சை பெறுபேறு உண்மைப் பிரதி ;
(ஈ) அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் ;
(உ) மேலே 3(ஈ) குறிப்பிடப்பட்டபடி உறுதிப்படுத்துவதற்காக பிரதேச செயலாளரின் ஒப்பத்துடன் கிராம சேவையாளரின் சான்றிதழ் ;
(ஊ) விண்ணப்ப முடிவுத் திகதி வரை சேவை ஆற்றியதற்கான சேவைச் சான்றிதழ் (அநுராதபுர பொது வைத்தியசாலையில் பேராசிரியர் பிரிவில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு மட்டும்).

11. **பயிற்சியளிக்கும் முறை** :

| பாடநெறி | பயிற்சிக்காலம் | பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளும் மொழி |
|---|---|---|
| தாதி பயிற்சி பாடநெறி | 06 மாதங்கள் | ஆங்கிலம் |

(i) நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்ப தாரர்கள் அவ்வப் பாடநெறிகளுக்காக உரிய பயிற்சிப் பாடசாலைகளில் இணைத்துக்கொள்ளப்படுவர். பாடநெறி ஆங்கிலத்தில் நடத்தப்படும்.

(ii) பயிலுனர்கள் பயிற்சிப் பாடசாலைகளின் சட்டதிட்டங்களுக்கும் சுகாதார அமைச்சின் கட்டளைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்.

(iii) பயிற்சிக்கால முடிவில் சித்தியடையாதவர்களும் நடத்தையில் திருப்தியற்றவர்களினதும் பயிற்சிப் பாடசாலையின் நிபந்தனைகளை ஏற்க மறுக்கின்றவர்களினதும் பயிற்சி எந்நேரத்திலும் எவ்வித நட்டஈடுமின்றி முடிவுக்கு கொண்டுவரப்படும்.

(iv) பயிற்சியாளர்களுக்கு பயிற்சிக்காலத்தில் 12,920 ரூபா மாதாந்த கொடுப்பனவாக வழங்கப்படும்.

(v) பயிற்சிக்காக இணைந்த பின்பு பயிற்சிநெறியை இடைநடுவில் கைவிடாமலும் பயிற்சி முடிவில் உரிய பதவிக்கு நியமனம் வழங்கப் பட்டால் 06 வருட காலத்திற்கு உரிய மாகாண சபை, மத்திய அரசின் கீழுள்ள வைத்தியசாலைகளில் அல்லது சுகாதார திணைக்களத்தில் சேவையாற்றுவதுடன் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்தின் ஒப்பந்தத்திற்கும் பிணைக்கும் உடன்படுவதுடன் பயிற்சிக்காலத்தில் பயிற்சியிலிருந்து நீங்கிக் கொண்டாலோ பயிற்சியைக் கைவிட்டாலோ மேலே III இன்படி பயிற்சியை இடையில் முடித்துக்கொண்டாலோ அல்லது குறித்த 06 வருட காலப்பகுதியில் சுகாதார திணைக்களத்தின் உரிய பதவியில் சேவையாற்ற மறுத்தாலோ பயிற்சிக் காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவும் அரசினால் செய்யப்பட்ட செலவும் பிணைக்குரிய முதலும் அவர்களால் சுகாதார சேவை திணைக்களத்திற்கு செலுத்த வேண்டும். இல்லாவிடின் இச்செலவை தாங்கள் ஒப்பந்தத்தின்படி சட்ட நடவடிக்கை மூலம் அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12. **சேவையில் இணைத்துக்கொள்வதற்கான நியமங்கள்**.- பயிற்சி முடிவில் பதவியில் நிரந்தர நியமனம் செய்தல்/செய்யாமல் விடும்

தீர்மானம் அச்சந்தர்ப்பத்தில் உள்ள பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பொறுத்ததாகும். அதன்படி பதவியில் நிரந்தர நியமனம் செய்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்தால் அபேட்சகர்கள் பயிற்சிபெற்ற பாடநெறிக்கு குறித்த பயிற்சிப் பாடநெறியின் நிபந்தனை மற்றும் வெற்றிடங்களின் அடிப்படையில் அரச நிருவாக சுற்றறிக்கை 6/2006(iv) இன் எம். டி. 7/2006 (A) இன்படி ரூபா 15,620 - 4 x 180 - 6 x 240 - 11 x 320 - 20 x 360 - ரூபா 28,500 சம்பள அளவுத்திட்டத்தில் குறித்த பதவியில் III ஆந் தரத்திற்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

13. விண்ணபத்தை நிரப்பும்போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் மற்றும் விபரங்களை மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் உள்ளடக்கவும், பயிற்சிக்காக இணைத்துக்கொள்ளும்போதும் நியமனம் பெற்ற பின்பும் மோசடியாக தயாரிக்கப்பட்ட சான்றிதழ்கள் என நிரூபணமாகும்போதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதுடன் இவ்விடயத்தை சட்ட நடவடிக்கைக்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதுடன் அந்நியமனம் இரத்துச்செய்யப்பட்டு பயிற்சியும் பதவியும் நீக்கப்படுவதோடு அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன் மீண்டும் அரச சேவையில் இணைய முடியாதவாறு கருப்புப் பட்டியலில் அவருடைய பெயர் சேர்க்கப்படுவதுடன், பயிற்சிக் காலத்தில் இவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவு அரசினால் வழங்கப்பட்ட பணம், பிணைக்காலத்திற்குரிய பணம் என்பன அறவிடப்படும்.

14. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் உரிய பாடநெறியில் பயிற்சி பெறுவதோடு நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கு உடல் உள தகுதியைக் கொண்டதோடு பயிற்சியின் முதலாவது மாதத்தின் வைத்திய பரிசோதனையில் உடற்தகுதியற்றவராக காணப்படுவாராயின் பயிற்சி அமர்வுக்கு பொருத்தமற்றவராக தீர்மானிக்கப்படும்.

15. மேற்படி இணைத்துக்கொள்ளப்பட்ட சகலரும் அரச சேவைக்குரிய சகல சட்டதிட்டங்களுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிர்வாக சுற்றறிக்கை பிரமாணங்களுக்கும், சுகாதார சேவைத் திணைக்களத்திற்குரிய கொள்கைகளுக்கும், நிதி சட்ட பிரமாணங்களுக்கும் வேறு சட்டங்களுக்கும் அரசின் காலத்திற்கு காலம் நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்களுக்கும் கட்டளைகளுக்கும் கட்டுப்படுதல்.

16. பயிற்சிக்கு இணைத்துக்கொள்வது தொடர்பில் இவ்வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தெளிவான மற்றும் தெளிவற்ற விடயங்கள் தொடர்பாக உருவாகும் பிரச்சினைகளுக்கு உடன்பாடு தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும். இவ்வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் இடையே ஏதாவது பிரச்சினை ஏற்படும் சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலே வலுப்பெறும்.

17. பயிற்சிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சிக் கல்லூரிகளில் தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு இந்த அமைச்சு கட்டுப்படவில்லை. அவ்வாறு வழங்குமானால் அது தொடர் பாக மதிப்பீட்டு வீட்டுக்கூலி, நீர் மற்றும் மின்சாரம் போன்றவற்றிற்கு கட்டணம் அறவிடப்படும்.

வைத்தியர் வை. டீ. நிஹால் ஜயதிலக்க,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
"சுவசிரிபாய",
இல. 385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10.
2013, யூன் 24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தாதி சேவைக்குரிய மறுபயிற்சி மற்றும் இணைப்புப் பாடநெறிக்காக விஞ்ஞானமானி தாதி பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் - 2013**

(விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்யும் முன் வர்த்தமானி அறிவித்தலை நன்கு வாசிக்கவும்.)

* விண்ணப்பிக்கும் பாடநெறி (சிங்களத்தில்/தமிழில்) :----.
* விண்ணப்பிக்கும் பாடநெறி (ஆங்கிலத்தில்) :----.

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
(உதாரணம்- A. B. C. Silva)

(ஆ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

(இ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. தபால் முகவரி :

| சிங்களத்தில்/தமிழில் | ஆங்கிலத்தில் |
|---|---|
| .......................................... | .......................................... |
| .......................................... | .......................................... |
| .......................................... | .......................................... |

4. (அ) நிரந்தர முகவரி :

| சிங்களத்தில்/தமிழில் | ஆங்கிலத்தில் |
|---|---|
| .......................................... | .......................................... |
| .......................................... | .......................................... |
| .......................................... | .......................................... |

(ஆ) தொலைபேசி இலக்கம் :

| தற்காலிக | நிரந்தர |
|---|---|
| | |

(இ) பதிவு மாவட்டம் (சிங்களத்தில்/தமிழில்) :----.
(ஆங்கிலத்தில்) :----.

(ஈ) நீங்கள் இந்த மாவட்டத்தில் பதிவுசெய்தவரா ? ஆம்/இல்லை :----.

(உ) ஆம் எனின் எவ்வளவு காலம் ? :----.

5. பிறந்த திகதி :

ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.

2013.08.26 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

6. பால் : பெண் ☐ ஆண்) : ☐
(குறித்த கட்டத்தினுள் ✓ அடையாளமிடுக.)

7. நீங்கள் இலங்கைப் பிரசையா ?

ஆம் ☐ இல்லை ☐
(குறித்த கட்டத்தினுள் ✓ அடையாளமிடுக.)

8. விவாகமானவர்/விவாகமாகாதவர் :

விவாகமானவர் ☐ விவாகமாகாதவர் ☐
(குறித்த கட்டத்தினுள் ✓ அடையாளமிடுக.)

9. கல்வித் தகைமைகள் :

| | பெற்ற பட்டம் | தரம் | சிறப்பு பொது மதிப்பீடு | பல்கலைக் கழகம் | கல்வி ஆண்டு |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |

10. நீங்கள் ஏதேனும் குற்றத்தின் பேரில் நீதிமன்றில் குற்றவாளியாக் கப்பட்டுள்ளீர்களா ?

ஆம் ☐ இல்லை ☐
(குறித்த கட்டத்தினுள் ✓ அடையாளமிடுக.)

ஆம் எனின் விளக்குக :------------------------------------
------------------------------------------------------
------------------------------------------------------

11. **விண்ணப்பதாரியின் சான்றிதழ் :**

(அ) வர்த்தமானி அறிவித்தலை பூரணமாக வாசித்து விளங்கிக்கொண்டதன் பின்னர் அதன் அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு விண்ணப்பப்படிவம் பூர்த்திசெய்யப்பட்டதுடன், நான் வேறேதும் முழுநேர பாடநெறியை தொடரவில்லை எனவும் இவ்விண்ணப் பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத் தும் நான் அறிந்தவரையில் உண்மையானவையும் சரியானவையும் எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்ட இந்த பிரகடனம் மற்றும் விண்ணப்பப்படிவத்தில் அடங்கியுள்ள ஏதேனும் தகவல்கள் பிழையானது என தெரியவருமிடத்து பயிற் சிக்கு நான் தகுதியற்றவராவதுடன் நியமனம் வழங்கப் படின் அதன் பின்னர் அது நிரூபிக்கப்படுமிடத்து சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

(இ) அதேபோன்று இது வெளிவாரியான ஆட்சேர்ப்பாவது டன் எனக்கு குறித்த பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்திசெய்ய முடியும் அல்லது முடியாதவிடத்து தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் இணைய முடியாதென்பதை நன்கு அறிவேன்.

| முத்திரை<br>ரூபா 300 |
|---|

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

12. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிசெய்தல் :**

இவ்விண்ணப்பத்தை முன்வைக்கும் ....................................... திரு./திருமதி/செல்வியை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன். என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை ........................ ஆந் திகதி வைத்தார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
உறுதிப்படுத்தும் அதிகாரியின் பதவி முத்திரை :
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

13. **விண்ணப்பதாரி அரச ஊழியராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :-**

(i) மேற்குறித்த விண்ணப்பதாரியாகிய ........................... ......................... திரு./ திருமதி/ செல்வி இத்திணைக் களத்தில் ................................................................ பதவியில் பதவி வகிக்கிறார் என்பதை உறுதிப்படுத்து கிறேன்.

(ii) விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்து வதுடன் இப்பதவி தொடர்பாக தெரிவுசெய்யப்படின் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்பதை யும் தெரிவிக்கிறேன்.

(iii) அத்துடன் இது வெளிவாரியான ஆட்சேர்ப்பாவதுடன் அவர் குறித்த பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்ய முடியும் அல்லது முடியாதவிடத்து தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் இணைய முடியாதென்பதை அவர் நன்கு அறிவார்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திணைக்களத் தலைவரின் முழுப்பெயர் :----.
திணைக்களத் தலைவரின் பதவி முத்திரை :
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

7-823

**கல்வி அமைச்சு**

*இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சை – 2013*

*இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை 2013, ஒற்றோபர் மாதம் கொழும்பில் நடைபெறும்.*

*2. இப்பரீட்சைக்குரிய பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் 1999, மாச்சு 11 ஆந் திகதிய 1070/13 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. வசதிக்காக அப்பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.*

*உத்தியோகத்தர் ஒருவருக்கு வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குரிய பாடங்களை ஒரே தடவையில் அல்லது தனித்தனியான சந்தர்ப்பங்களில் தோற்ற முடியும்.*

***பாடவிதானம் :***

| விடய இல. | பாடம் | புள்ளி | நேரம் |
|---|---|---|---|
| 01 | **பொது முகாமைத்துவம் மற்றும் தாபனச் செயற்பாடுகள் :**<br>அரச தாபனக்கோவையின் i, ii, iii, iv, v, vii, viii, ix, xii, xiii, xiv, xxiv, xxviii, xxx மற்றும் xxxi ஆகிய வாசகங்களுக்கு விசேட கவனத்துடன் தாபன விதிக்கோவையின் சட்டம் | 100 | 1 1/2 மணித்தியாலம் |
| 02 | **நிதி ஒழுங்குக் கோவை :**<br>அரச நிதி ஒழுங்குப் கோவையின் முதலாவது பிரிவின் i, ii, v, viii, xii மற்றும் xiv வாசகங்களுக்கு விசேட கவனத்துடன் | 100 | 1 1/2 மணித்தியாலம் |
| 03 | **கல்விச் சட்டம் :**<br>பரீட்சார்த்திகளிடம் கீழ்க்குறிப்பிடப்பட்ட கட்டளைச் சட்டம் மற்றும் பாராளுமன்றச் சட்டம் தொடர்பான அறிவு எதிர்பார்க்கப்படுகின்றது-<br>(i) 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க கல்விக் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட சட்டக் கோவைகள்.<br>(ii) 1960 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை மற்றும் ஆசிரியர் கல்லூரி (விசேட ஒழுங்கு விதிகள்) சட்டம்.<br>(iii) 1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் சட்டம்.பாடசாலை மற்றும் ஆசிரியர் கல்லூரி (குறைநிரப்பு ஒழுங்குவிதிகள்)<br>(iv) 1976 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பகிரங்கப் பரீட்சை (மறுசீரமைப்பு)ச் சட்டத்தினால் மறுசீரமைக்கப்பட்ட 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பகிரங்க பரீட்சைச் சட்டம்.<br>(v) 1981 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை (விசேட ஒழுங்குவிதிகள்) சட்டம்.<br>(vi) 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வித்தாபனச் சட்டம்.<br>(vii) 1986 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க கல்விக் கல்லூரிச் சட்டம்.<br>(viii) 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கல்வி ஆணைக்குழுச் சபைச் சட்டம்.<br>(ix) 1997 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க தேசிய ஆசிரிய கல்வி அதிகாரசபைச் சட்டம்.<br>(x) 13 ஆவது மறுசீரமைப்பு மற்றும் அடிப்படை உரிமை தொடர்பான 3 ஆவது வாசகத்துக்கு விசேட கவனத்துடன் இலங்கை அரசியல் யாப்பு.<br>(xi) கல்விக்குரியதான மாகாண சபையினால் விதிக்கப்பட்ட கட்டளைச் சட்டம். | 100 | 2 மணித்தியாலம் |

***குறிப்பு**.- பரீட்சார்த்திகளினால் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 40% புள்ளிகளைப் பெறவேண்டும்.*

3. **பரீட்சையின் மொழிமூலம்**.- (i) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்பட மாட்டாது.

(ii) போட்டிப் பரீட்சை மூலம் அரச சேவையில் இணைந்துகொண்ட பரீட்சார்த்தியாயின் பரீட்சையின் மொழி மூலமாக போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலமும், போட்டிப் பரீட்சை இன்றி அரச சேவையில் இணைந்துகொண்ட பரீட்சார்த்தியாயின் இப்பரீட்சையின் மொழி மூலமாக அரச சேவைக்குப் பிரவேசிக்கத் தகைமை பெற்ற பரீட்சைக்குத் தோற்றிய மொழியினைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

4. பரீட்சார்த்தி தமக்கு உரிமையற்ற மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்றுவதாகத் தெரியவருமிடத்து அவர் பரீட்சார்த்தி நிலையிலிருந்து நீக்கப்படுவார்.

5. விண்ணப்பப்படிவம் கீழ்க்குறிப்பிடப்பட்ட மாதிரி படிவத்திற்கமைய தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் சகல தலைப்புக்களும் முதலாம் பக்கத்தில் அமையக்கூடியவாறு தயாரிக்கப்பட வேண்டியதுடன் அதற்குரிய தகவல்களை தமது கையெழுத்தினால் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்களும், முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாத தகவல்களைக் கொண்ட விண்ணப்பப்படிவங்களும் முன்னறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கது என்பதுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி படிவத்திற்கமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரியினால் வினவ வேண்டியதுடன் அவ்வாறு இல்லாதபட்சத்தில் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரைச் சிங்கள மொழிமூல விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடவேண்டும்.

6. இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துவதற்காக அவரால் விதிக்கப்பட்ட சட்டங்களைப் பின்பற்ற பரீட்சார்த்தி பொறுப்பாக இருக்க வேண்டும்.

7. விண்ணப்பப்படிவத்தை 2013.08.19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். அத்தினத்திற்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2-II வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை" எனக் குறிப்பிட்டு அனுப்பவேண்டும்.

8. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அவ் அறிவித்தல் பிரசுரமாகி 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதவர்கள் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தாங்கள் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவம் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் உறுதிசெய்யப்பட்ட போட்டோப் பிரதி, பதிவுசெய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றை கொழும்புக்கு வெளிப் பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்தையும் தொலைநகல் மூலம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவது மிகவும் பயன்மிக்கதாக அமையும்.

9. மேற்கூறப்பட்ட 8 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்திசெய்யத் தவறும் பரீட்சார்த்திகளினால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

10. விண்ணப்பதாரர் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய விண்ணப்பப்படிவத்தை பரீட்சை தினத்தன்று பரீட்சை மண்டபத்தில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்.

11. பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக சாட்சிகளை சமர்ப்பிப்பது பரீட்சார்த்தியின் பொறுப்பாக இருப்பதுடன் அதற்காகக் கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை,

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

12. விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டையொன்றை வழங்குவதன் மூலம் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குப் பூரண தகைமைகளைக் கொண்டுள்ளார் எனக் கருதப்பட முடியாது.

13. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி கீழ்க்குறிப்பிடப்படும் அடிப்படையில் பரீட்சைக் கட்டணத்தை செலுத்துதல் வேண்டும் :-

(அ) முதற் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றுபவர்களிடமிருந்து முழுமையான பரீட்சைக் கட்டணம் அல்லது பகுதிக்காக கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

| | | ரூபா |
|---|---|---|
| (ஆ) மொத்தப் பரீட்சைக் கட்டணம் | - | 450 |
| ஒரு பாடத்திற்கு | - | 150 |

பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இல் வைப்பிடக்கூடியவாறு நாட்டின் எந்தவொரு மாவட்ட அல்லது பிரதேச செயலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராது ஒட்டவும். (மேலும் அதன் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.)

14. பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரர்களதும் பெறுபேற்று ஆவணங்கள் "செயலாளர், கல்வி அமைச்சு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்" மூலம் வழங்கப்படும்.

எஸ். எம். கோட்டாபய ஜயரத்ன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்லை,
2013, யூலை 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

*இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆந் தர வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சை – 2013*
(Efficiency Bar Examination in Class 2 Grade II of Sri Lanka Teacher Educators' Service – 2013)

(விண்ணப்பப்படிவம் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற விலாசத்திற்கு நிறுவனத் தலைவரூடாக பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.) (பரீட்சையின் பெயர் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் : சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐

(உரிய குறியீட்டு இலக்கத்தைக் குறிப்பிடவும்)

1. (அ) முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடனான பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :-----.
உ-ம் : Mr./Mrs./Miss SILVA, A.B.

(ஆ) முதலெழுத்துக்களினால் குறித்துக்காட்டப்படும் பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

2. பிறந்த திகதி :-

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3. (i) பதவிப் பெயர் :-----.
(ii) சேவையாற்றும் கல்விக் கல்லூரி/ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி/ஆசிரிய மத்திய நிலைய முகவரி :-----.
(அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பப்படும்)

4. சொந்த முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

5. அறிவித்தலின் 2 ஆம் வாசகம் (அ) இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாட இலக்கம் மற்றும் பாடத்துடன் எடுக்கும் பாடங்களைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும் :-

| பாட இலக்கம் | பாடத்தின் பெயர் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |

6. இதற்கு முன்னர் இப்பரீட்சைக்கு முழுமையாக அல்லது அதில் ஒரு பகுதிக்குத் தோற்றியுள்ளீரா ? அவ்வாறாயின் பாடம் மற்றும் தோற்றிய ஆண்டு, மொழிமூலத்தைக் குறிப்பிடவும் :-

| பாடங்கள் | ஆண்டு | மொழி மூலம் | பரீட்சை சுட்டெண் |
|---|---|---|---|
| ................................<br>................................ | ................................<br>................................ | ............................<br>............................ | ............................<br>............................ |

7. செலுத்திய பரீட்சைக் கட்டணம் :-

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும்.<br>பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கது. |

8. மேற்கூறப்பட்ட விபரங்கள் சரியானவை என்றும், வர்த்தமானி அறிவித்தலில் 3 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்ட மொழிமூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற எனக்கு உரிமை உண்டு என்பதை தெரிவிக்கிறேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு கட்டுப்பட இணங்குகிறேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
பரீட்சைத் திணைக்களம்.

(1) இவ்விபரம் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்ற தகுதிபெற்றவர் என்றும் வர்த்தமானி அறிவித்தலின் 3 ஆவது வாசகத்திற்கமைய அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமை உடையவர் என்றும் சான்றுபடுத்துகிறேன்.

(2) பரீட்சார்த்தி உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியதாகவும் அப்பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

........................................................
பீடாதிபதி/ஆசிரிய மத்திய நிலையப்
பொறுப்பாளரின் கையொப்பம்.

திகதி :-----.

7-853

---

## இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2013

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2013 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் கொழும்பில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கிறேன்.

2. இப்பரீட்சைக்குரிய பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் 1225/32 ஆம் இலக்க, 2002.03.01 ஆந் திகதி கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. வசதிக்காக இப்பாட விதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

பரீட்சை ஒழுங்குவிதிகள் :

(அ) முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் கீழ்க்குறிப்பிடப்பட்ட பாடங்கள் உள்ளடங்குகின்றன :-

| | |
|---|---|
| பாட இலக்கம் 1 | பொது நிர்வாகம்.- இலங்கை அரசியல் யாப்பு, தாபன விதிக்கோவையின் ஒழுங்கு விதிகள், அரசின் ஏனைய விதிமுறைகள் |
| பாட இலக்கம் 2 | நிதி |
| பாட இலக்கம் 3 | கல்வி, கல்விச்சட்டம், நிர்வாகம் மற்றும் மேற்பார்வை |

(ஆ) உத்தியோகத்தர் முதலாவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சைக்குரிய பாடங்களுக்காக ஒரே தடவையில் அல்லது வெவ்வேறான சந்தர்ப்பங்களில் தோற்ற முடியும்.

(இ) ஒவ்வொரு வினாப்பத்திரங்களுக்குமான நேரம் மூன்று மணித்தியாலங்களாகும்.

3. **பாடவிதானம் :**

(1) பொது நிர்வாகம் :

(அ) இலங்கை (யாப்பு) அரச கட்டளை 1946 மற்றும் 1947 (973 ஆவது வாசகம்)

1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க குடியுரிமைச் சட்டம் (349 ஆவது வாசகம்)

1972 ஆம் ஆண்டின் மே 22 ஆந் திகதி விதித்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் யாப்பு

1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கம் கொண்ட வாக்காளர்களை பதிவுசெய்யும் சட்டம்

1981 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல் சட்டம்

1981 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கருத்துக் கணிப்பீட்டுச் சட்டம்

1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான சட்டம்
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பு

(ஆ) அலுவலக வெளிக்கள அமைப்பு முறைகளும் தாபன விதிக்கோவையின் ஒழுங்குவிதிகள் மற்றும் அரசின் ஏனைய ஒழுங்குவிதிகள்
தாபனவிதிக்கோவையின் வாசகங்கள்
I, II, III, IV, V, VI, VII, IX, X, XI, XVI, XXV, XXVI, XXVII, XXIX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII

(2) நிதி :

(அ) அரச நிதிப் பிரமாணத்தின் 1 ஆம் பகுதி (1 ஆவது வாசகத்தைத் தவிர)

(ஆ) நடைமுறை ஆண்டின் வருமானம் மற்றும் செலவின மதிப்பீடு (உ-ம்) அவற்றின் தயாரிப்புக்கள், வருமானத் தலைப்பு, நிதி மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டம்

(இ) கல்வி அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படும் கணக்குப் பணிகளுக்கு உரியதான கட்டளைச் சட்டங்கள் மற்றும் ஏனைய சட்டக் கொள்கைகள்

(3) கல்வி, கல்விச் சட்டம், நிர்வாகம் மற்றும் மேற்பார்வை :

(அ) கல்விச் சட்டம் :
பரீட்சார்த்திகள் கீழே குறிப்பிடப்பட்ட கட்டளைச் சட்டங்கள் மற்றும் பாராளுமன்றச் சட்டங்கள் தொடர்பான அறிவு மற்றும் விளக்கத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் :

* 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க கல்விக் கட்டளைச் சட்டம்
* 1947 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க திருத்தப்பட்ட கட்டளைச் சட்டம்
* 1951 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க திருத்தல் சட்டம்
* 1953 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க திருத்தல் சட்டம்
* அரச பாடசாலைகள் தொடர்பான பிரமாணக் குறிப்பு
* 1960 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி (விசேட ஒழுங்குவிதிகள் திருத்தல்) சட்டம்
* 1961 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி (மேலதிக ஒழுங்குவிதிகள்) சட்டம்
* 1973 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கல்வி (பதவிப்பெயரை மாற்றி அமைத்தல்) சட்டம்
* 1979 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க பிரிவெனாச் சட்டம்
* 1981 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி (விசேட ஒழுங்குவிதிகள்-திருத்தல்) சட்டம்
* 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவகச் சட்டம்

(ஆ) கல்வி நிருவாகம் :

(1) கல்வி அமைச்சின் கொள்கைகள் :

(i) கல்வி அமைச்சு
(ii) மாவட்டத் திணைக்களம் உட்பட அமைச்சுக்களின் கீழுள்ள திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் கல்வி அமைச்சின் கட்டமைப்பும் செயற்பாடுகளும்
(iii) தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் கல்வித் திட்டமிடலின் நோக்கம், திட்டங்களை (பாடசாலைத் திட்டமிடல்கள் உட்பட) அமுல்படுத்தல் போன்றன

(2) பாடசாலை முகாமைத்துவம், பாடசாலை சமூக தொடர்பாடல்கள்
(3) கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை
(4) விசேட கல்வி வேலைத்திட்டங்கள்

(இ) கல்வி மேற்பார்வை :

* பாடசாலை மேற்பார்வைக்கான திட்டங்கள் மற்றும் ஆசிரியர்களின் செயற்சாதனை மதிப்பீட்டுக்காகப் பயன்படுத்தப்படும் அனுமானங்கள்
* பாடசாலையில் தொடர்ச்சியான மதிப்பீட்டு வேலைத்திட்டங்கள்
* பாடசாலைகளின் சுயமதிப்பீட்டு வேலைத் திட்டங்கள்
* மாவட்டம், திணைக்களம் மற்றும் கல்வி அமைச்சினால் பாடசாலை மேற்பார்வைகள்
* வெளிக்குழுக்கள் மூலம் உள்ளக மதிப்பீட்டு மேற்பார்வைகள்

(கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள், கையேடுகள் மற்றும் ஏனைய வெளியீடுகள் தொடர்பாக விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு பரீட்சார்த்திகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது.)

பரிந்துரை செய்யப்பட்டுள்ள நூல்கள் மற்றும் வெளியீடுகள் :

* கல்வித் திட்டமிடல் மற்றும் நிர்வாகம் தொடர்பான ஆசிய நிறுவனம் (1970)
* கல்வி நிர்வாகம் தொடர்பான முகாமைத்துவ கலைமுறைகள்
* கருத்தரங்கு அறிக்கைகள் - புதுடில்லி
* பரி மற்றும் டை (1975) பாடசாலையை நடாத்துதல்-டெம்பிள் ஸ்மித், லண்டன்
* புஷ் டீ கிளேட்டர், ஆர். குட் மற்றும் சீ றிசர்ஸ் (1980) பாடசாலை
* முகாமைத்துவ ஒழுங்குவிதிகள் காப்பர் மற்றும் றோ
* கலாநிதி கான் முகைதீன் செரீப் (1983)
* பாடசாலை நிர்வாகம் (புதுடில்லி)
* கல்வி அமைச்சின் இலங்கைக் கல்வி (1969)

* கல்வி மற்றும் கலாச்சார பணிகள் அமைச்சின் நூற்றாண்டுக் குழு II ஆவது மற்றும் III ஆவது பகுதி
* திறந்த பல்கலைக்கழகம் (1981) பாடசாலைகளின் கொள்கை வகுப்பு ஒழுங்குவிதிகள் மற்றும் தலைமைத் துவம் (ஈ 323 பாடநெறியின் 4 ஆவது பகுதி), திறந்த பல்கலைக்கழக யுனிவர்சிட்டி பிறஸ், லண்டன்
* சிப்மன், மார்டன் (1983) பாடசாலை மதிப்பீடு கய்ஸ்மன் கல்வி நூல் லண்டன், கல்வி அமைச்சின் முகாமைத் துவ மறுசீரமைப்புத் தொடர்பான அறிக்கை - 1984

4. அவ்வவ் வினாத்தாள்களுக்காக மொத்தப் புள்ளிகளின் அளவு 100 ஆகும். சித்தியடைவதற்காக அவ்வவ் பாடங்களில் 40 வீதம் அல்லது அதனைவிடக் கூடுதலான புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

5. **பரீட்சை மொழிமூலம்** :

(i) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடைபெறும்.

(ii) பரீட்சார்த்தி அரச கரும மொழி அல்லது தேசிய மொழி மூலம் பதிலளிக்க முடியும்.

(iii) பரீட்சார்த்தி அரச சேவையில் இணைந்துகொள்வதற்காக தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழி மூலமோ அல்லது போட்டிப் பரீட்சை இன்றி அரச சேவைக்கு இணைந்தவர்கள் தொடர்பாக அரச சேவைக்கு இணைவதற்கு தகைமைபெற்ற மொழி மூலமாகப் பதிலளிக்க வேண்டும்.

6. பரீட்சார்த்தி தமக்குரியதல்லாத மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றியதாகத் தெரியவரும் பட்சத்தில் அவரின் பரீட்சார்த்தி தன்மை இரத்துச்செய்யப்படும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் மொழியைப் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்பட மாட்டாது.

7. கீழ்க்குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய ஏ4 அளவு கடதாசியில் விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் 1 ஆம் பக்கத்திலும் எஞ்சியவை 2 ஆம் பக்கத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.) சிங்கள விண்ணப்பப்படிவத்தில் பரீட்சையின் பெயர் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழி மூலமும், தமிழ் விண்ணப்பப்படிவத்தில் பரீட்சையின் பெயர் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும். உரிய தகவல்களை தமது கையெழுத்தினால் தெளிவாகப் பூரணப்படுத்த வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பங்கள் மற்றும் முறையாகப் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவத்தின் போட்டோப் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரியால் விளக்கம் பெறவேண்டியதுடன் அன்றேல் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதனையும் கருத்திற்கொள்ளவும்.

8. பரீட்சையானது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துவதற்காக அவரினால் விதிக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளைப் பின்பற்ற பரீட்சார்த்தி கட்டுப்பட்டுள்ளார். பரீட்சை தொடர்பான சட்டவொழுங்குகள் இவ்வறிவித்தலில் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

9. விண்ணப்பப்படிவம், 2013.08.26 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர், ''பரீட்சை ஆணையாளர், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை'' என்ற முகவரிக்கு திணைக்களத் தலைவரினால் பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். இக்குறித்த தினத்திற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. விண்ணப்பதாரிக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரமாகி இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காத பட்சத்தில் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக் களத்திற்கு அறிவிக்க வேண்டும். தாங்கள் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோப் பிரதியையும் உறுதிசெய்யப்பட்ட பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு வெளிப்பிரதேச மாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்தையும் அதனுடன் வைத்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது பயன்மிக்கதாகும் (தொலைநகல் இல. 011-2784232) :-

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;
(iii) பரீட்சார்த்தியின் முகவரி ;
(iv) விண்ணப்பப்படிவம் தபாலிட்ட திகதி, பதிவிலக்கம் மற்றும் தபால் அலுவலகம்.

11. மேலே (09) ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை நிவர்த்திசெய்யத் தவறும் பரீட்சார்த்தியால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

12. (i) சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியதுடன் பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளருக்கு தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்து வதற்கான சான்றுகளைச் சமர்ப்பிப்பது பரீட்சார்த்தியின் பொறுப்பாக இருப்பதுடன் அதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

13. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தியிடமிருந்து பரீட்சைக் கட்டணத்தை அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உரிய பரீட்சைக் கட்டணம், பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இல் வைப்புச் செய்யக்கூடியவாறு நாடெங்கும் அமைந்துள்ள எந்தவொரு மாவட்ட அல்லது பிரதேச செயலகத்திலும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவும். (பற்றுச்சீட்டின் பிரதியைத் தாங்கள் வைத்திருப்பது பயன்மிக்கதாகும்).

(அ) முதல் தடவைக்கு (முழுமையான பரீட்சை அல்லது ஒரு பகுதிக்கு கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) அதற்குப் பின்னர் ஒவ்வொரு தடவைக்காகவும்-

| | | |
|---|---|---|
| முழுமையான பரீட்சைக்காக | ரூ. | 1,000 |
| ஒரு பாடத்திற்கு | ரூ. | 500 |

14. (i) பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்ற சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளதாக கருத்திற்கொண்டல்ல என்பதனைக் கவனத்தில்கொள்ள வேண்டும்.

(ii) பரீட்சை நடைபெறுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படவேண்டி ஏற்படும்.

எஸ். எம். கோட்டாபய ஜயரத்ன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
பெலவத்தை,
பத்தரமுல்லை.
28.06.2013.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2013**

FIRST EFFICIENCY BAR EXAMINATION FOR OFFICERS IN CLASS III OF THE SRI LANKA EDUCATION ADMINISTRATIVE SERVICE

(பத்தரமுல்லை, பெலவத்தை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு திணைக்களத் தலைவர் ஊடாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்)

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

உத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

(பரீட்சையின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.)

1. (அ) முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : உதாரணம் : SILVA, S. A :----.

(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2. (i) அலுவலக முகவரி :----.
(ii) தனிப்பட்ட முகவரி :----.
(iii) பரீட்சை அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(v) தொலைபேசி இலக்கம் :----.

3. அறிவித்தலின் (02) ஆவது வாசகத்தின் பிரிவு (அ) இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் தோற்றும் பாடங்கள் தொடர்பாக தெளிவாகக் குறிப்பிடவும்.

பாட இலக்கம் பாடம் :----.

பாட இலக்கம் பாடம் :----.

பாட இலக்கம் பாடம் :----.

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

5. பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

6. (i) பதவிப்பெயர் :----.

(ii) திணைக்களம்/வலயக்கல்வி அலுவலகம்/கோட்டக்கல்வி அலுவலகம்/பாடசாலை :----.

7. இப்பரீட்சைக்கு முன்னர் முழுமையாக அல்லது பகுதியாகத் தோற்றியிருப்பின் அவ்வாறு தோற்றிய ஆண்டு, பாடம் மற்றும் மொழியைக் குறிப்பிடவும் :

| ஆண்டு | பாடம் | மொழிமூலம் |
|---|---|---|
| ..................... | ..................... | ..................... |
| ..................... | ..................... | ..................... |
| ..................... | ..................... | ..................... |

8. மேற்கூறப்பட்ட விபரங்கள் உண்மையானது என்றும் மேலே (06) ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற உரிமை உண்டென்றும் பரீட்சை தொடர்பான சகல சட்ட ஒழுங்குகளுக்கும் இணங்குவதாகவும் தெரிவிக்கிறேன். மேலும் பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்குக் கட்டுப்படுவதாகவும் தெரிவிக்கிறேன்.

9. பற்றுச்சீட்டு விபரங்கள் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகத்தின் பெயர் : ----.

(ii) பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் :----.

(iii) செலுத்திய பணத்தொகை :----.

| பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை ஒட்டவும்.<br>(போட்டோ பிரதியை வைத்திருக்கவும், உரியதாயின் மாத்திரம்) |
|---|

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,

சமர்ப்பிக்கிறேன்.

இவ்விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற தகைமை பெற்றுள்ளதாகவும் 6 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற அவர் தகைமை பெற்றுள்ளதாகவும் இத்தால் சான்றுபடுத்துகிறேன்.

பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு மேலே ஒட்டப்பட்டுள்ளதாகவும் சான்றுபடுத்துகிறேன். (*)

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்,
பதவிப்பெயர், பதவி முத்திரை.

திகதி :----.

(*) கட்டணம் செலுத்த அவசியமற்றிருப்பின் இரத்துச் செய்யவும்.

7-710

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.